### சமையல் எரிவாயு (LPG) தட்டுப்பாட்டைக் கண்டித்தும் – தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் – ஒன்றிய அரசையும், அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து

# சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட 6 தொகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச்செயலாளர்– அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



ஒன்றிய பா.ஜ.க – NDA அரசின் தவறான வெளியுறவுக் கொள்கையாலும் முன்னெச்சரிக்கை நடடிவக்கை எடுக்காததாலும், தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள சமையல் வரிவாயு (LPG) தட்டுப்பாட்டைக் கண்டித்தும், தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் NDA அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து 15.3.2026 **ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி** சார்பில் கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள விவரப்படி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

| வ. எண் | நாள் / நேரம் | இடம் | தலைமை |
|---|---|---|---|
| 1. | 15.3.2026<br>ஞாயிறு<br>காலை 10.00 மணி | **துறைமுகம் சட்டமன்ற தொகுதி**<br>சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில்,<br>சென்னை. | **தலைமை**<br>**திரு.பி.கே.சேகர்பாபு**<br>**அமைச்சர் – செயலாளர்**<br>சென்னை கிழக்கு மாவட்டம்<br>**முன்னிலை**<br>**எஸ்.இராஜசேகர்**–பகுதி செயலாளர்<br>**எஸ். முரளி**–பகுதிசெயலாளர்<br>**இரா.நரேந்திரன்**<br>தொகுதி பார்வையாளர்<br>**P.ஸ்ரீராமுலு**–5வது மண்டலகுழு தலைவர் |
| 2. | 15.3.2026<br>ஞாயிறு<br>காலை 10.00 மணி | **எழும்பூர் சட்டமன்ற தொகுதி**<br>எல்.ஜி.ரோடு, வரதராஜபுரம்,<br>புதுப்பேட்டை, சென்னை–2. | **தலைமை**<br>**திரு.செல்வபெருந்தகை, MLA**<br>தலைவர் – தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி<br>**முன்னிலை**<br>**திரு.தயாநிதிமாறன் எம்.பி**<br>கழக விளையாட்டு மேம்பாட்டு அணிசெயலாளர்<br>**திரு.இ.பரந்தாமன் MLA**<br>கழக வழக்கறிஞர் அணி இணைச் செயலாளர்<br>**வி.சுதாகர்** – பகுதி செயலாளர்<br>**சொ.வேலு எம்.சி** – பகுதி செயலாளர்<br>**பி.எம்.யாழினி**<br>தொகுதி பார்வையாளர் |
| 3. | 15.3.2026<br>ஞாயிறு<br>காலை 10.00 மணி | **திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதி**<br>பாரதி சாலை<br>பெரம்பூர் பேருந்து நிலையம் அருகில்<br>பெரம்பூர், சென்னை–11. | **தலைமை**<br>**பிரியாராஜன்**<br>பெருநகர சென்னை மாநகராட்சி மேயர்<br>**முன்னிலை**<br>**ப.தாயகம்கவி MLA**<br>கழக அமைப்பு துணைச்செயலாளர்<br>**செ.தமிழ்வேந்தன்**–பகுதி செயலாளர்<br>**எம்.சாமிக்கண்ணு**–பகுதி செயலாளர்<br>**என்.கிருஷ்ணமூர்த்தி**<br>தொகுதி பார்வையாளர் |
| 4. | 15.3.2026<br>ஞாயிறு<br>காலை 10.00 மணி | **கொளத்தூர் சட்டமன்ற தொகுதி**<br>பெரவள்ளுர் சதுக்கம், அகரம்<br>சென்னை. | **தலைமை**<br>**இரா.விடுதலை**<br>**முன்னிலை**<br>**டாக்டர்.கலாநிதி வீராசாமி, எம்.பி**<br>கழக அயலக அணித்தலைவர்<br>**இரா.கிரிராஜன் எம்.பி,**<br>கழக சட்டத்திருத்தக்குழு செயலாளர்<br>**ப.ரங்கநாதன்**<br>தலைமை செயற்குழு உறுப்பினர்<br>**எ.நாகராசன் எம்.சி**–பகுதி செயலாளர்<br>**ஐ.சி.எப்.வ.முரளிதரன்**–பகுதி செயலாளர்<br>**சரிதா மகேஷ் குமார்**<br>6வது மண்டல குழு தலைவர் |
| 5. | 15.3.2026<br>ஞாயிறு<br>காலை 10.00 மணி | **வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதி**<br>நாதமுனி திரையரங்கம் அருகில்,<br>வில்லிவாக்கம் | **தலைமை**<br>**அ.வெற்றிஅழகன், MLA**<br>கழக பொறியாளர் அணி இணைச் செயலாளர்<br>**முன்னிலை**<br>**கூ.பீ.ஜெயின் எம்.சி**–பகுதி செயலாளர்<br>**வே.வாசு**–பகுதி செயலாளர்<br>**ஓ.ஏ.நாகலிங்கம்**–தொகுதி பார்வையாளர் |
| 6. | 15.3.2026<br>ஞாயிறு<br>காலை 10.00 மணி | **அம்பத்தூர் சட்டமன்ற தொகுதி**<br>OT பேருந்து நிலையம் அருகில்,<br>அம்பத்தூர் | **தலைமை**<br>**டி.ஆர்.பாலு, MP., –கழக பொருளாளர்**<br>**முன்னிலை**<br>**ஜோசப் சாமுவேல் MLA**–பகுதி செயலாளர்<br>**பி.கே.மூர்த்தி** – தலைமை செயற்குழு உறுப்பினர்<br>**DSP.ராஜகோபால் எம்.சி**–பகுதி செயலாளர்<br>**MTR.நாகராஜ்**–பகுதி செயலாளர்<br>**சன்.முனியாண்டி**–தொகுதி பார்வையாளர் |

மேற்கண்ட தொகுதிகளில் நடைபெறும் நன ஆர்ப்பாட்டத்தில் அந்தந்த தொகுதிக்குட்பட்ட கழக மற்றும் மதச்சார்ப்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் மாநில /மாவட்ட / பகுதி/ வட்ட நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

### 2026–2027 ஆம் ஆண்டுக்கான சிறப்பு நிலை விளையாட்டு விடுதி!

# மாணவ - மாணவியர் சேர்க்கை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது!

சென்னை,மார்ச்.15–

தமிழ்நாடு விளை யாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் செயல் படும் சிறப்பு நிலை விளையாட்டு விடுதிகளில், கல்லூரிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு அறிவியல் சார்ந்த பயிற்சி, தங்குமிடம் மற்றும் சத்தான உணவு வசதியுடன் விளையாட்டு பயிற்சி வழங்கப்படுகிறது.

2026-2027 ஆம் ஆண்டுக்கான சிறப்பு நிலை விளையாட்டு விடுதி மாணவ/மாணவிகளுக்கான சேர்க்கைக்கு 17 வயது முதல் 25 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். 01.07.2001 அன்று அல்லது அதற்கு பின்னர் பிறந்தவராகவும், 01.07.2009 அன்று அல்லது அதற்கு முன்னர் பிறந்தவராகவும் இருக்க வேண்டும். 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று கல்லூரிகளில் சேரும் மாணவ/ மாணவியர்கள் சிறப்பு விளையாட்டு விடுதிகளில் சேர்க்கப்படுவர்.

தேசிய, மற்றும் மாநில அளவிலான விளை யாட்டுப்போட்டிகளில் பதக்கங்கள் வென்ற மாணவ, மாணவியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். முதுநிலை பட்டப்படிப்பு முதலாம் ஆண்டு படிப்பில் சேர்வதற்காக இளநிலை பட்டப்படிப்பை முடித்திருக்க வேண்டும். இளநிலைப் படிப்பின் போது சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வென்ற மாணவ, மாணவியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

30.03.2026 அன்று காலை 7.00 மணிக்கு சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் ஆண் & பெண், தடகளம், பளுதூக்குதல், ஜுடோ, வாள்விளையாட்டு, கையுந்துபந்து, ஹாக்கி மற்றும் கால்பந்து ஆண்கள் பிரிவு ஆகிய விளையாட்டுகளுக்கான தேர்வுகள் நடைபெறும்.

மேலும் அதே நாளில் காலை 7.00 மணிக்கு சென்னை ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கத்தில் ஆண் & பெண், கூடைந் பந்து குத்துச் சண்டை கைபந்து மற்றும் கால்பந்து பெண்கள் பிரிவு ஆகிய விளையாட்டுகளுக்கான தேர்வுகள் நடைபெறும்.

விளையாட்டில் சிறந்து விளங்கும் மற்றும் ஆர்வமுள்ள மாணவ / மாணவியர்கள், சிறப்பு நிலை விளையாட்டு விடுதி சேர்க்கைக்கான ஆன்லைன் விண்ணப்பப் படிவத்தினை 13.03.2026 முதல் www.sdat.tn.gov.in என்ற இணையதள முகவரியில் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம். ஆன்லைன் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க கடைசி நாள்: 26.03.2026 அன்று மாலை 5.00 மணி ஆகும். ஆன்லைன் விண்ண ப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப் படும்.

மேலும் தகவல்களுக்கு தமிழ் நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் ஆடுகள தகவல் தொடர்பு மைய அலைப்பேசி 9514000777 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். சிறப்பு விளையாட்டு விடுதியில் சேர விரும்பும் மாணவ / மாணவியருக்கான மாநில அளவிலான தேர்வுப் போட்டிகள் 30.03.2026 அன்று காலை 7.00 மணியளவில் கீழ்க்கண்ட இடங்களில் நடத்தப்பட இருப்பதால் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

### திரு.வி.க.நகர் மண்டலத்தில் ரூ.31.28 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட

# பல்நோக்கு மையக் கட்டடத்தில் - நியாய விலைக் கடை!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு திறந்து வைத்தார்!




சென்னை, மார்ச்.15-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, நேற்று (14.03.2026) இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள், திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு71க்குட்பட்ட பெரம்பூர் நெடுஞ்சாலையில் திரு.வி.க நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.தாயகம் கவி அவர்களின் தொகுதி மேம் பாட்டு நிதியில் ரூ.31.28 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்கு மையக் கட்டடத்தில் உள்ள நியாய விலைக் கடையினைத் திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார்.

இந்தக் கட்டடம் 660 சதுர அடி பரப்பளவில் சேமிப்பு அறை மற்றும் கழிப்பறை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடத்தில் பெரம்பூர் ஹைரோடு பயன் பெறுவோர் கூட்டுறவு பண்டகச் சாலை நியாய விலைக் கடை எண். 2ன் மூலமாக 1200 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறுவார்கள்.

இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, திரு. வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி (எ) சிவகுமார், மத்திய வட்டார துணை ஆணையாளர் எச். ஆர்.கௌஷிக், மண்டல அலுவலர் ஜி சொக்கலிங்கம், பொது விநியோகத் திட்டம் துணைப் பதிவாளர் செல்வகுமார், உணவுப் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை துணை ஆணையர் திரு.கருணாகரன், உதவி ஆணையர் திருமதி சூரிய பிரியா, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி புனிதவதி எத்திராஜன், திரு.மு. சரவணன், அம்பேத்வளவன் மற்றும் அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

### தமிழ்நாட்டு மக்களை ஏமாற்ற முடியாது!

# அ.தி.மு.க. - பா.ஜனதா சந்தர்ப்பவாதக் கூட்டணிக்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள்!

## காங்கிரஸ் எஸ்.சி. துறை தலைவர் எம்.பி.ரஞ்சன்குமார் அறிக்கை!



சென்னை,மார்ச்.15–

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் எஸ்.சி. துறை தலைவர் எம்.பி.ரஞ்சன் குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பிரதமர் மோடிக்கு, தேர்தல் வந்தால் மட்டுமே தமிழ்நாட்டு மக்கள் நினை வுக்கு வருவர். திமுக அரசு விஞ்ஞானப்பூர்வ ஊழலைச் செய்திருப்பதாக ஆதாரமே இன்றி பேசி இருக்கிறார். ஊழலைப் பற்றி பேச மோடிக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? இந்தியாவில் கொரோனா தொற்று பரவிய போது பி.எம். கேர்ஸை தொடங்கினார். மக்களிடமிருந்து 10 ஆயிரம் கோடி ரூபாய் வரை நிதி குவிந்தது. இந்தப் பணம் எங்கே போனது? மத்திய அரசின் பாரத் திட்டத்தில், ஏலம் விடுதலில் முறைகேடு நடந்திருப்பதாக மத்திய கணக்குத்தணிக்கைக்குழு குறிப்பிட்டதே? விரைவுப் பாதை கட்டுமானத்தில், ஒரு கிலோ மீட்டருக்கு திட்டச் செலவான 18 கோடி ரூபாயில் இருந்து 250 கோடி ரூபாய் செலவழித்தது ஏன்?

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் சுங்கச்சாவடி களில் விதிமுறைகளை மீறி பயணிகளிடம் 132 கோடி ரூபாய் வசூல் செய்யப் பட்டதே? ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் 7% லட்சம் பயனாளிகளின் விவரங்கள், ஒரே தொலை பேசி எண் ணில் இணைக்கப்பட்டதை என்ன சொல்லி அழைப்பீர்கள்? அயோத்யா மேம்பாட்டுத் திட்டத்தில் ஒப்பந்த தாரர்களுக்குத் தேவையற்ற சலுகைகள் வழங்கப்பட்டதற்கு என்ன பெயர்? எச்.ஏ.எல். விமான எஞ்சின் வடிவ மைப்பில் தவறு செய்ததால், 154 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதற்கு பொறுப்பு? யார்? இதெல்லாம் ஊழல் இல்லாமல் வேறென்ன?

ஈரான் போரால் சமையல் எரிவாயு தட்டுப்பாடு அதி கரித்துக் கொண்டிருக்கிறது. மக்கள் இன்னலுக்கு ஆளாகாமல் தடுக்க தீவிரநடவடி க்கைகளை மேற் கொள்கிறார் முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின்.ஆனால், திருச்சியில் பேசிய மோடி இதையெல்லாம் வெறும் வதந்தி என்று எளிதாகக் கடந்து போகிறார்.

தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லதிமுக, காங்கிரஸ் கூட்டணி இணைந்து செயல்படுகிறது. ஆனால், மிகவும் மோசமாக விமர்சித்த டி.டி.வி. தினகரன், அன்புமணி ராமதாஸ் ஆகியோருடன் சேர்ந்து பா.ஜ.க.வுடன் எந்த அடிப்படையில் எடப்பாடி பழனிசாமி கூட்டணி வைத்திருக்கிறார்? என்பதை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். மூவருமே செய்த ஊழல், முறைகேட்டிலிருந்து தப்பிக்கவே அடிமையாகி இருக்கிறார்கள்' என்பதே உண்மை


12 ஆண்டுகளாக தமிழ் நாட்டுக்கு துரோகம் மட்டுமே செய்து விட்டு தேர்தல் நெருங்கும் நேரத்தில் திட் டங்களை தொடங்குவது கபட நாடகமின்றி வேறெ ன்ன? தகுதியுள்ள 1.31 கோடி குடும்பத் தலைவிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ். மாதம் ரூ.1,000 வழங்குகிறதுதிராவிட மாடல் அரசு. விடியல் பயணம் திட்டத்தின்கீழ் அரசுப் பேருந்துகளில் பெண்கள் கட்டணமில்லாமல் பயணம் செய்ய ஆண்டுக்கு சுமார் ரூ.2,500 கோடிக்கும் மேலாக அரசு மானியம் வழங்குகிறது. அரசுப் பள்ளிகளில் படித்து உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் ரூ.1,000 வழங்கப்படுகிறது. இதற்காக ஆண்டுக்கு சுமார் ரூ.350 கோடிக்கும் மேல் நிதி ஒதுக்கப்படுகிறது. அரசுப் பள்ளிகளில் பயின்று உயர் கல்விசேரும் மாணவிகளின் சேர்க்கையை 34 சதவீதம் அதிகரித்துள்ளது. தொழில்முனைவோர் மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், புதிய தொழில் தொடங்கும் பெண்களுக்கு 25 சதவீதம் மானியம் (ரூ.75 லட்சம் வரை) மற்றும் 3 சதவீதம் வட்டிச் சலுகையும் வழங்கப்படுகிறது. பெண்களின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டை பல்வேறு திட்டங்கள் மூலம் உறுதி செய்வதில் நாட்டிலேயே முன்னணியில் இருப்பது தமிழ்நாடே!

பெண்களுக்கான இது போன்ற திட்டங்களை உங்களால் சொல்ல முடியுமா? தமிழ்நாட்டு மக்களை உங்களால் ஒருபோதும் ஏமாற்ற முடியாது. இது தேசிய ஜனநாயக கூட்டணி அல்ல. தேசிய ஊழல் கூட்டணி என்பதை தான் திருச்சி மேடை சொல்கிறது. சந்தர்ப்பவாத கூட்டணிக்கு பாடம் புகட்ட தமிழ்நாட்டு மக்கள் தயாராகி விட்டார்கள்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தோழர் சாரங்கபாணி
### மார்ச் 15 (1965)



**மாயவரம் ஏ.வி.சி. கல்லூரியில் பயிலும் மாணவரான இவர், 1965ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15ஆம் நாள் அன்று காலை கல்லூரிக்கு வந்து யாரும் காணாதபடி கல்லூரித் திடலில் தன்மீது மண்ணெண்ணை ஊற்றித் தீயிட்டுக் கொண்டு, "இந்தி ஒழிக! தமிழ் வாழ்க!" என்று முழக்கமிட்டுக் கொண்டிருந்த போது, அவரது முழக்கத்தை கேட்ட மாணவர்கள் தீயை அணைக்க முயன்று தோல்வியுற்றனர். குற்றுயிராக உள்ள சாரங்கபாணி மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார். அங்கு "தமிழ்த் தாய்க்கு என் உயிரைத் தந்துவிட்டேன்" என்று கூறி முடிக்கவும் உயிர் பிரிந்தது.**

**சாரங்கபாணி மாணவர் நடத்திய இந்தி எதிர்ப்பு ஊர்வலங்களை முன்னின்று நடத்தியவர். மாயவரம் ரெயில் நிலைய அறப்போராட்டத்தில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**